DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**
**CC.No.12/2024**

**2025-ம் ஆண்டு ஜனவரி திங்கள் 29- ம் நாள் புதன்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 8-வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு.சரவணன் இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 8 | தொழில் | - | உதவி ஆய்வாளர் |
| பெயர் | - | ரவி | வட்டம் | - | வால்பாறை |
| த/பெ | - | இருளப்பன் | சமயம் | - | |
| கிராமம் | - | காடம்பாறை காவல் நிலையம் | வயது | - | 58/2025 |
| சாதி | - | | | | |

**29-01-2025**

**( எதிரி ஆஜரில்லை )( எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317-ன் கீழான மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)**

**முதல் விசாரணை:**

நான் தற்போது காடம்பாறை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 06-05-2023-ம் தேதி காடம்பாறை காவல் நிலையத்தில் பணியில் இருந்தபோது நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பணி செய்த நிலைய குற்ற எண் 10/2023, சட்டப்பிரிவுகள் 279, 337 இதச வழக்கினை நான் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றே 17.45 மணிக்கு சம்பவயிடமான வால்பாறை டு பொள்ளாச்சி மெயின்ரோடு 29-வது கொண்டை ஊசி வளைவு அருகே சாட்சிகள் சிவஞானராஜ் மற்றும் முத்தையா ஆகியோர்களின் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார். **(மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பின்னர் சாட்சிகள் சிவஞானராஜ் மற்றும் முத்தையா ஆகியோரை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து அன்றே 18.00 மணிக்கு பொள்ளாச்சி அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலை எடுத்து கார்த்தி என்பவர் இறந்துவிட்டபடியால் வழக்கின் சட்டப்பிரிவினை 279, 337 இதசவில் இருந்து 279, 304 இதசவாக பிரிவு மாற்றம் செய்து பிரிவு மாற்று அறிக்கை தாக்கல் செய்தேன். **(அந்த பிரிவு மாற்று அறிக்கை அ.சா.ஆ. 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பின்னர் வழக்கு கோப்பினை மேல்விசாரணைக்காக நிலைய காவல் ஆய்வாளர் திரு. சிவக்குமார் அவர்களின் பார்வைக்கு வைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தது யார் என்றால் சிறப்பு சார்பு ஆய்வாளர் கிருஷ்ணமூர்த்தி பதிவு செய்தார். முதல் தகவல் அறிக்கை எத்தனை மணிக்கு பதிவு செய்தார் என்றால் 17.30 மணிக்கு பதிவு செய்துள்ளார். நான் சம்பவயிடத்திற்கு எத்தனை மணிக்கு சென்றேன் என்றால் 17.45 மணிக்கு சென்றுவிட்டேன். நான் சம்பவயிடத்திற்கு சென்றபோது அந்த இடத்தில் சிவஞானராஜ் மற்றும் முத்தையா இருந்தார்களா என்றால் ஆமாம். நான் சம்பவயிடத்தை பார்வையிட்டபோது அங்கு என்னென்ன இருந்தது என்றால் விபத்துக்குள்ளான இரு சக்கவர

வாகனத்தின் முகப்பு விளக்கு மற்றும் உதிரி பாகங்கள் அந்த இடத்தில் கிடந்தது. நான் சம்பவயிடத்தை பார்வையிட்டபோது அந்த இடத்தில் TN 57 BQ 2 என்ற இனவோ கார் இருந்ததா என்றால் நான் பார்க்கும்பொழுது அங்கு இல்லை. இருசக்கர வாகனம் சம்பவயிடத்தில் இருந்த முக்கோண போர்டில் L ஆங்கில்லில் மோதி எதிரே வந்த இனவோ காரில் மோதி இறந்த கார்த்திக்கிற்கு காயம் ஏற்பட்டு 108 ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு கொண்டு சென்றுள்ளார் என்று முதல் தகவல் அறிக்கையில் உள்ளது என்றால் சரிதான். நான் சம்பவயிடத்திற்கு போகும் போது இனவோ கார் இருந்ததா என்றால் இல்லை. இரு சக்கர வாகனம் மோதி விபத்து ஏற்பட்டதாக சொல்லப்படும் தடுப்புசுவரின் கம்பி மற்றும் சம்பவயிடத்தில் கிடந்த இரு சக்கர வாகனத்தின் உதிரி பாகங்கள் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினோமா என்றால் இல்லை. நான் சம்பவயிடமே செல்லாமல் காவல் நிலையத்தில் வைத்து பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்து சாட்சிகளை காவல் நிலையம் வரவழைத்து கையொப்பம் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை** :இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி. N.மீனாட்சி,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.